# 15C உருக்காட்டல், கலந்துரையாடல் மற்றும் ஆழமான பகுப்பாய்வு

1. நீங்கள் தனிப்பட்ட முறையில் பா.மொ.க வின் நேர்மறைத் தாக்கத்தை எங்கு காண்கிறீர்கள்? (அதாவது உங்கள் வகுப்பறைக் கற்பித்தல்!) உங்கள் மாணவர்களில், சுதந்திரமான ஆராய்ச்சி முடிவுகளில்; இது தொடர்பான சில குறிப்புகளை வெளிப்படுத்துங்கள், முன்வையுங்கள், கலந்துரையாடுங்கள்!

2. நீங்கள் கற்பிக்கின்ற இடத்தின் பா.மொ.க வின் (மற்றும் உங்கள் வகுப்புக்கள்) தாக்கத்தன்மை நன்மை தொடர்பில் எவை பற்றி உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை? ஏன்? இவை தொடர்பான கருத்துக்களையும் வெளிப்படுத்துங்கள், முன்வையுங்கள், கலந்துரையாடுங்கள்!

3. தயவு செய்து "அமெரிக்காவில் ஆய்வு" இயல் 15 A 2 இனை இன்னொரு தடவை மீளாய்வு செய்யுங்கள். உங்கள் மாணவர்களின் முதல் மொழி அல்லது தாய் மொழியின் செயற்றிறன் குறித்து பா.மொ.க வின் தாக்கத்தை எவ்வாறு தனிப்பட்ட முறையில் கணிப்பீடு செய்கிறீர்கள்?

4. தயவு செய்து "அமெரிக்காவில் ஆய்வு" இயல் 15 A 2 இனை இன்னொரு தடவை மீளாய்வு செய்யுங்கள். பா.மொ.க வுக்கு சமூகமளிக்கும் மாணவர்களுக்கும் புலம்பெயர்நாட்டு பள்ளி அமைப்பில் மாணவர் வெற்றிக்கும் இடையே என்ன விளைவுகளை நீங்கள் காண்கிறீர்கள்? உங்களுடைய பார்வையில், இவ்விளைவுகள் முதன்மையாக பா.மொ.க வில் பங்குபற்றலின் முடிவா, அல்லது பா.மொ.க வகுப்புக்களில் முதன்மையாக கல்வி கற்ற குடும்பங்களிலிருந்து வந்த பிள்ளைகளின் பங்கேற்றலா (அதாவது பாடசாலையில் நல்ல வாய்ப்புக்களைப் பெற்றிருக்கும் பிள்ளைகள்)?

5. இயல் 15 A 4 ஹாட்மட் எஸ்ஸரின் நிலை பற்றிய ஒரு விமர்சன மீளாய்வினை வழங்குகின்றது. முதல் மொழி அல்லது தாய்மொழி அறிவு குடிபுகு நிலையில் பள்ளி வெற்றிக்கு எந்த முக்கியத்துவத்தினையும் பெற்றிருக்கவில்லை என்பதை அது உணர்த்துகிறது குடிபெயர் நாட்டின் மொழியில் தகைமையே தீர்மானிக்கும் காரணியாக அமைகிறது. உங்கள் கருத்து என்ன? எப்படி நீங்கள் எஸ்ஸரின் கோட்பாட்டை எதிர்கொள்வீர்கள், அல்லது அது எவ்விதத்தில் மாற்றியமைக்கப்பட வேண்டும்?

6. இயல் 15 A 5 பா.மொ.க மற்றும் வழமையான வகுப்பறைக் கற்பித்தலுக்கும் இடையே ஒரு நல்ல தொடர்பாடல் இருத்தல் மற்றும் பா.மொ.க மாணவர்களின் செயற்றிறன் தொடர்பாகவும் மிக விரும்பத்தக்கது என்பதை அறிவுறுத்துகிறது. இப்பரப்பில் உங்களுக்கு தனிப்பட்ட முறையில் ஏதாவது பட்டறிவுகள் உண்டா, மற்றும் / அல்லது இச்சூழலில் உங்கள் அவா மற்றும் எதிர்பார்ப்புக்கள் என்ன?

7. இயல் 15 B யில், எடினா க்றோம்பாக் அவரது ஆய்வுக் கருத்திட்டத்தின் முதன்மைக் கண்டுபிடிப்புக்கள், அதே போல ஜேர்மன் பேசும் சுவிற்சர்லாந்தில் பா.மொ.க பற்றிய கண்ணோட்டம் ஒன்றையும் முன்வைக்கிறார். இந்த கண்டுபிடிப்புக்கள் மற்றும் முன்னோக்குகள் உங்களுடையவற்றினுடன் எவ்வாறு தொடர்புறுகின்றன? வேறுபாடுகள் எங்கே உள்ளன? நீங்கள் தற்போது வாழும் கற்பிக்கும் நாட்டிலுள்ள குறிப்பிட்ட சூழ்நிலைக்கு அவற்றைத் தொடர்புபடுத்த முடியுமா?

8. இவ்வியலின் தலைப்பைக் கருத்திற் கொள்கையில் - பாரம்பரிய மொழி கற்பித்தலின் செயற்றிறன்கள் பற்றிய ஆய்வுகள் - ஆய்வின் நிலை, ஆய்வுச் சிக்கல்கள், ஆய்வின் தேவைப்பாடு-: உங்கள் கருத்தில், நீங்கள் வாழும் வேலை செய்யும் நாட்டில் பா.மொ.க பற்றிய ஆய்வு மற்றும் ஓர் ஆழமான பகுப்பாய்வுக்கான இன்றியமையாதது எது, அதன் செயற்றிறன் தொடர்பில் மற்றும் இச்செயற்றிறன் மூலக்கூறுகள் இதனை முன்னேற்றுவதற்கான வாய்ப்புகள் உள்ளனவா?

IV